







# வேலை செய்தல்

## வேலையில் ஈடுபடுவது

நீங்கள் இப்போதுதான் ஜெனீவாவிற்கு வந்து சேர்ந்தீர்களா மற்றும் நீங்கள் ஹாஸ்பிஸ் ஜெனரலின் பயனாளியா? வேலைக்குச் செல்வது பற்றி உங்களுக்கு கேள்விகள் உண்டா ?

பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை இந்த ஆவணம் உங்களுக்கு வழங்குகிறது.

- 1. சுவிட்சர்லாந்தில் யார் வேலை செய்யலாம்?
- 2. நான் பிரெஞ்சு மொழி கற்ற நிலை போதுமானதா?
- 3. நான் எந்த துறையில் பணியாற்ற முடியும்?
- 4. வேலை தேடுவதற்கு நான் எப்படி தயார் செய்வது?
- 5. நான் எப்படி வேலையை தேடுவது?
- 6. வேலை வாய்ப்புக்கு நான் எப்படி விண்ணப்பிப்பது?
- 7. எனக்கு வேலை வழங்கப்பட்டவுடன், எனக்கு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் தேவையா?
- 8. எனது சம்பளம் எப்படி வழங்கப்படும்?

SCAN ME

## 1. சுவிட்சர்லாந்தில் யார் வேலை செய்யலாம்?

உங்களிடம் B அல்லது F அல்லது S வகை அனுமதி இருந்தால், நீங்கள் வயது பதினெட்டு முதல் சுவிட்சர்லாந்தில் எங்கு வேண்டுமானாலும் அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலும் வேலை செய்யலாம்.
சட்டப்பூர்வ ஓய்வூதிய வயதைத் தாண்டி நீங்கள் வேலை செய்ய அனுமதிக்கப்படுகிறீர்கள் (முதியோர் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் காப்பீடு, AVS).
உங்களிடம் B அல்லது F வகை அனுமதி இருந்தால், https://www.easygov.swiss/easygov/#/fr/refugee இணையதளத்தில் ஒரு படிவத்தை முதலாளி நிரப்ப வேண்டும்.
உங்களிடம் S வகை அனுமதி இருந்தால், கன்டோனல் மக்கள் தொகை மற்றும் இடம்பெயர்வு அலுவலகத்திற்கு (OCPM) பணி அனுமதிப் பத்திரத்திற்கு முதலாளி விண்ணப்பிக்க வேண்டும்.
உங்களிடம் N வகை அனுமதி இருந்தால், வந்து சேர்ந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்தில் வேலை செய்யத் தொடங்கலாம்.
பணி அனுமதிக்கு முதலாளி OCPM இடம் விண்ணப்பிக்க வேண்டும்.
மற்ற அனுமதிகளுக்கு, கன்டோனின் மக்கள் தொகை மற்றும் இடம்பெயர்வு அலுவலகத்திலிருந்து (OCPM) தகவலைப் பெறுவது முக்கியம்.

## 2. நான் பிரெஞ்சு மொழி கற்ற நிலை போதுமானதா?

ஜெனீவாவில் ஒரு வேலையைத் தேடுவதற்கும், வாழ்க்கையில் ஒருங்கிணைவதற்கும், நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு பிரெஞ்சு மொழியைப் பேசுகிறீர்களா என்று உறுதி செய்ய வேண்டும்.
ஜெனீவாவில் மொழிப் படிப்புகளை வழங்கும் பல சங்கங்கள் உள்ளன. தயவுசெய்து கவனிக்கவும்: இப் படிப்புகளின் செலவுகள் மற்றும் விவரங்கள் வித்தியாசமாக இருக்கலாம்.

## 3. நான் எந்த துறையில் பணியாற்ற முடியும்?

ஜெனீவாவில் ரியல் எஸ்டேட், காப்புறுதி, ஹோட்டல்கள் மற்றும் கேட்டரிங், சுகாதாரம், சில்லறை விற்பனை, கட்டுமானம் மற்றும் போக்குவரத்து ஆகியவை முக்கிய துறைகளாகும்.
ஜெனீவாவில் நீங்கள் ஆர்வமாக உள்ள மற்றும் கிடைக்கக்கூடிய தொழில்களை அடையாளம் காண சென்டர் டி பிலன் ஜெனீவ் உங்களுக்கு

உதவும். வேலை தேடுவதற்கு உங்களுக்கு பல்வேறு படிப்புகள் மற்றும் பயிற்றுகைகள் வழங்கப்படும்.

## 4. வேலை தேடுவதற்கு நான் எப்படி தயார் செய்வது?

ஜெனீவாவில் ஒரு தொழில்முறை ஒருங்கிணைப்பு திட்டம் உள்ளது. நகராட்சிகள், *Bureau de l'intégration des étrangers* (BIE) and the *Office pour l'orientation, la formation professionnelle et continue* ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுச்செயல்பாடு உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

கீழ்கண்டவற்றைப் பற்றி சில பயனுள்ள தகவல்களையும் நீங்கள் காணலாம்:

- பொருளாதாரத்துக்கான மாநிலச் செயலாளரின் இணையதளம், வேலை தேடும் எந்த விஷயத்த்தைப் பற்றியும்.
- வேலைத் தேடுவது மற்றும் வேலைவாய்ப்பு நேர்காணல்களுக்கான உதவிக்குறிப்புகளுக்கு Office cantonal de l'emploi மற்றும் orentation.ch இன் இணையதளம்.
- ஜெனீவாவில் உள்ள அனைத்து தொழில்களையும் பற்றிய கருத்தைப் பெற *Cité des Métiers* கோப்பகம்.

## 5. நான் எப்படி வேலையை தேடுவது?

நீங்கள் வேலை தேடும் போது உங்களுக்கு சிறந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள, உங்கள் திறமைக்கு ஏற்ற வேலைகளை விரைவாக குறிவைத்துக் கொண்டு ஏராளமான விண்ணப்பங்களைச் செய்ய வேண்டும்.

நீங்கள் இன்னுமதிக விரைவில் வேலை தேட உதவும் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் உள்ளன. வேலை வாய்ப்புகளை செய்தித்தாள்கள் அல்லது இணையத்தில் காணலாம்.

வேலை வாய்ப்பு வெளியிடப்படாவிட்டாலும் தன்னிச்சையாக வேலைக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் வேலை தேடுகிறீர்கள் என்று உங்களைச் சுற்றியுள்ளவர்களிடம் கூறுவது முக்கியம், அதனால் அவர்கள் ஏதேனும் வாய்ப்புகளைப் பற்றி கேள்விப்பட்டால், அவர்கள் உங்களைப் பற்றி நினைப்பார்கள்.

"L'*emploi à Genève, guide pratique pour les personalnes migrantes*" ("ஜெனீவாவில் பணிபுரிதல், புலம்பெயர்ந்தோருக்கான நடைமுறையான வழிகாட்டி"),

*"Guide pratique pour les femmes migrantes en recherche d'emploi"* ("வேலை தேடும் புலம்பெயர்ந்த பெண்களுக்கான நடைமுறையான வழிகாட்டி") போன்ற நீங்கள் வேலைத் தேடிக்கொள்வதற்கு உதவும் நடைமுறையான வழிகாட்டிகளையும் நீங்கள் காணலாம்.

## 6. வேலை வாய்ப்புக்கு நான் எப்படி விண்ணப்பிப்பது?

நீங்கள் வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிக்கும்போது சில ஆவணங்கள் தேவை. பெரும்பாலான முதலாளிகள் இவற்றை உங்களிடம் கேட்பார்கள்:

- ஒரு முகவுரைக் கடிதம்
- ஒரு தகைமைத் திரட்டு (CV)
- உங்கள் டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ்களின் நகல்
- உங்கள் பணிச் சான்றிதழ்களின் நகல்

உங்கள் விண்ணப்பம் வேலையுடன் பொருந்தினால், நேர்காணலை ஏற்பாடு செய்ய முதலாளி மீண்டும் தொடர்புகொள்வார்.

உங்களுடைய சரியான தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைத் தருகின்றீர்களா என்று உறுதிசெய்துக் கொண்டு, உங்கள் விண்ணப்பத்திற்குப் பிறகு முதலாளி உங்களைத் தொடர்பு கொள்ள முயற்சித்திருக்கிறாரா என்பதையும் சரிபார்க்கவும்.

## 7. எனக்கு வேலை வழங்கப்பட்டவுடன், எனக்கு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் தேவையா?

ஆம், உங்களுக்கு வேலை கிடைத்திருந்தால், வேலையின் காலநீடிப்பு , எத்தனை மணிநேரம் வேலை செய்வீர்கள், சம்பளம் மற்றும் வருடாந்திர விடுப்பு உரிமை ஆகியவை குறிப்பிடப்பட்டு, எழுதப்பட்ட ஒப்பந்தத்தை நீங்கள் கேட்க வேண்டும்.

உங்கள் முதலாளியுடன் தகராறு ஏற்பட்டால், இந்த ஒப்பந்தம் உங்களைப் பாதுகாக்கும்.

## 8. எனது சம்பளம் எப்படி வழங்கப்படும்?

உங்கள் சம்பளம் பொதுவாக ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் உங்கள் வங்கிக் கணக்கில் முதலாளியால் செலுத்தப்படும். நீங்கள் ஒரு தற்காலிக

ஏஜென்சி மூலம் பணிபுரிந்தால், அடுத்த மாத தொடக்கத்தில் உங்கள் சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு: நீங்கள் ஹாஸ்பிஸ் ஜெனரலில் உதவி பெறும்போது, உங்களின் ஊதியச் சீட்டின் நகலை உங்கள் சமூக சேவையாளருக்கு அனுப்ப வேண்டும்.

அங்கீகாரமில்லாமல் வேலை செய்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஜாக்கிரதை, அது சட்டவிரோதமானது! இது உங்கள் குடியிருப்பு அனுமதி விண்ணப்பத்திற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம். நீங்கள் பெற்ற நிதி உதவியையும் நீங்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும்.